(2) பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker transmitting a copy of the Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Second Amendment) Bill, 1972, as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution.

I have also received messages from the Hon. Speaker transmitting the following Bills, as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill, 1972.

2. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1972.

3. The Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Bill, 1972.

(3) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மதுரைப் பல்கலைக் கழகப் பேரவையில் அங்கம் வகித்து வந்த திருவாளர்கள் வே. தங்கப் பாண்டியன், என். வில்சன் அப்போல்லாஸ் ஆகியோருடைய பதவிக் காலம் முடிவுற்றதால் ஏற்பட்ட காலியிடங்களுக்கு திருவாளர்கள் டி. சந்தோஷம், எஸ். டி. ஆதித்தன் ஆகியோர் மட்டுமே போட்டியிட்டதால் அவர்களிருவரும் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறையாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கிறேன்.

(4) சட்ட மன்ற விவாதங்களை அச்சிடுதல்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விவாதங்களின் இறுதிப்படிகள், கடந்த கூட்டத்தொடர் இறுதி வரைக்கும் அச்சிட்டு, வெளியிடப்பட்டு, மேலவை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மேலவையில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி கொள்ளுகிறேன். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இதை நம்மால் சாதிக்க முடியவில்லை. எழுதுபொருள்—அச்சுத் துறைக்குப் பொறுப்பு வகிக்கிற

1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியாலும். எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநரும், சட்ட மன்ற மேலவை விவாதங்களை அச்சிட்டு வெளியிடும் பணியைக் கவனிக்கின்ற அரசு அச்சக அதிகாரிகளும், பணியாளர்களும் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டி, அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளாலும் இந்தச் சாதனையைப் புரிந்திடமுடிந்தது. இந்த அவையின் பாராட்டுதல்களை நான் அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

இங்கிலாந்தில், ‘ஹன்ஸார்டு’ என அழைக்கப்படும் ‘நாடாளு மன்ற மக்கள் பேரவை விவாதங்கள்’ அன்றிரவே அச்சிடப்பட்டு, மறுநாள் பேரவை உறுப்பினர்கள் காலைச் சிற்றுண்டி கொள்ளும் வேளைக்குள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. அவ்வாறு அச்சிட்டுக்கொடுப்பதுதான் நமது இலட்சியமாயிருக்க வேண்டும். ஆனால் இங்கு நமது மேலவையின் ஒரு கூட்டத்தொடர் விவாதங்கள், அடுத்த கூட்டத்தொடர் தொடங்குமுன்னராவது அச்சிட்டு வெளியிடப்பட்டு நமக்குக்கிடைக்க வேண்டும். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஊக்கத்திலும் உற்சாகத்திலும் சட்ட மன்ற மேலவை விவாதங்கள் கூட்ட நாளுக்குப் பின்னர் ஒரு திங்களுக்குள்ளாயினும் அச்சிட்டு வெளியிடப்படுதல் இயலும் என நம்புகின்றேன்.

விவாதங்கள் மிக விரைவில் அச்சிடப்பட்டு, வெளிவரத் துணை புரியும் வகையில் மாண்புமிகு அமைச்சர்களும், மதிப்பிற்குரிய உறுப்பினர்களும், தங்கள் ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பப் படும் விவாத வரைப்படிகளைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் அவற்றிற்கு ஒப்புதளித்து அவற்றைத் திருப்பியனுப்பும் வகையில் அவர்களும் இதில் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

3. கவன ஈர்ப்பு

மதுரை மாநகரிலுள்ள நிலங்களின் மதிப்பை நகர்ப்புற நிலவரி உதவி ஆணையாளர் அளவுகடந்தும், நியாயமற்ற முறையிலும் உயர்த்தி வரையறுத்ததன் விளைவாக நிலவரி அதிகமாகி நிலவரி செலுத்துவோருக்கு கவலையையும், அச்சத்தையும், இன்னல்களையும் தோற்றுவித்துள்ளது குறித்து.

*Thiru M. RAJAH IYER (on behal of Thiru D. Santhosam) : Mr. Cnairman, Sir, under rule 42, I wish to call the attention of the Hon. the Minister for Food and Revenue to a matter of urgent